# 'சட்டம் ஒழுங்கு கெட்டது' என்பது -
# அரங்கேற இயலாத அரசியல் நாடகமே!

**இதோ இங்கே விவரிக்க இருக்கும் காட்சிகள் ஏதோ, இந்தியாவில் மிகப் பெரிய பொருட் செலவில் தயாராகிய திரைப் படத்தில் வரும் திடுக்கிட வைக்கும் காட்சிகள் என்று கருதிவிடாதீர்கள். படிக்கும் போதே நெஞ்சைப் பதைபதைக்க வைக்கும் இந்தப் படுபயங்கரங்கள் நிஜத்தில் நடந்தவை. திரைப்படங்களில் கதாசிரியர் தனது கற்பனையை விரித்து, அதற்கு இயக்குநர், ஒளிப்பதிவாளர், சண்டைக் காட்சி அமைப்பாளர் மேலும் மெருகூட்டிவரும் காட்சியை விடக் கொடூரமானவை!**

### காட்சி : 1

அது ஒரு சனிக்கிழமை, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 15ந் தேதி, நேரம் இரவு 10.30 மணி. ஒரு மருத்துவமனை வளாகத்திலிருந்து பலத்த போலிஸ் காவலுடன் இரு கைதிகள் அழைத்து வரப்படுகின்றனர்! வெளியே வந்ததும் அங்கு கூடியிருந்த ஊடகவியலாளர்கள் காமிரா, மைக் சகிதம் அந்த இருவரையும் நோக்கி விரைகின்றனர். அந்த இருவரில் மூத்தவரிடம் செய்தியாளர் ஒருவர் ஏதோ கேள்வி கேட்க, அவரும் பதிலைக் கூறுகிறார். அப்போது யாரும் எதிர்பாராத நேரத்தில் 'டுமீல்', "டுமீல்" என சத்தம் எழுகிறது. கைதிகளாக போலீஸ் காவலில் இருந்த இருவர் மீதும் குண்டுகள் பாய்கின்றன! கொலைகாரர்களில் ஒருவன், சாவகாசமாக எதைப் பற்றியும் கவலைப்படாது, கைதிகளில் மூத்தவன் தலையில் அணிந்திருந்த தலைப்பாகை (டர்பன்)யை அகற்றிவிட்டு அவன் தலையிலும் சுடுகிறான். இரத்தம் பீறிட்டு எழுகிறது.

அண்ணன் - தம்பி இருவருமே போலீசார் முன்னிலையில் சுட்டுத் தள்ளப்பட்டு, ஊடகவியலாளர்கள் கண்முன்னேயே சடலங்களாக இரத்த வெள்ளத்தில் சாய்கின்றனர்.

யார் அந்த இருவர்? மூத்தவன் பெயர் அதிக் அஹமது (Atiq Ahamad). இந்த அதிக் அஹமது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். அது மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்! அதே நேரத்தில் பல கொலை, கொலை செய்திட முயற்சி போன்ற பல வழக்குகள் இவர் மீது இருந்துள்ளதாகக் கூறப்பட்டது. சரி; விவகாரத்துக்கு வருவோம். இந்தச் சம்பவம் நடந்தது நமது இந்தியாவில்தான். பா.ஜ.க. ஆளும் உத்திரப்பிரதேசத்தில்! அப்போதைய உ.பி. முதலமைச்சர், சாட்சாத் யோகி ஆதித்யநாத் அவர்கள் தான். இப்போதைக்கு இந்தக் காட்சியை சிறிது நேரம் ஒத்திவைத்து விட்டு அடுத்த காட்சி என்ன என்பதைப் பார்ப்போம்!

### காட்சி : 2

இது நடந்தது, அதே 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆம் தேதி. முதல் காட்சி நடந்த இடம், மருத்துவமனைக்கு வெளியே; போலீசார் கண் முன்னே என்றால், இந்தச் சம்பவம் (காட்சி 2) நடந்தது நீதிமன்ற வளாகத்தின் உள்ளேயே!

விசாரணைக்காக அந்தக் குற்றவாளியை போலீசார் நீதிமன்றத்துக்கு அழைத்து வந்தனர். திடீரென வழக்கறிஞர் உடையில் வந்த ஒருவன் அந்த நபரை நோக்கி படபடவெனத் துப்பாக்கியால் சுடுகிறான். நீதிமன்றத்திலேயே அவன் இரத்த வெள்ளத்தில் சாய்கிறான். அவனை அழைத்து வந்த போலீசாரில் ஒருவர் மீதும், குண்டு பாய்ந்து காயம் ஏற்படுகிறது. நீதிமன்ற வளாகத்திலேயே சுட்டு வீழ்த்தப்பட்ட அந்த நபரின் பெயர் சஞ்சீவ் ஜீவா! இந்த சஞ்சீவ் ஜீவா பி.ஜே.பி. சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் கொலைக்காகக் கைது செய்யப்பட்டவர். இந்த நபர் மீது கொலை உட்பட 24 வழக்குகள் இருந்ததாகக் கூறப்பட்டது. இந்த ஜீவா மீது ஆறு குண்டுகள் பாய்ச்சப்பட்டு அதிலே நான்கு குண்டுகள் அவனது மார்பகத்தைத் துளைத்துள்ளது. நடந்த நேரம் பிற்பகல் 3.30 மணி. சுட்டு வீழ்த்திய கொலைகாரனுடன் மேலும் மூன்று பேர் இருந்திருக்கலாம் என்று போலீசாரால் கூறப்பட்டது.

பட்டப் பகலில் நீதிமன்றத்தினுள்ளேயே (Open Court) சுட்டு வீழ்த்தப்பட்ட இந்த நிகழ்வு நடந்தது உத்திரப்பிரதேசத்தின் லக்னோ நீதிமன்றத்தில்! இந்த திடுக்கிட வைக்கும் நிகழ்ச்சியில் ஒரு இரண்டு வயது சிறுமியும், அவரது தாயாரும், ஒரு போலீஸ் அதிகாரியும் காயமடைந்துள்ளனர்.



Atiq Ahmed [right] and his brother Ashraf being interviewed by reporters on their way to a medical checkup moments before they were killed (ANI)

இந்த லக்னோ நீதிமன்றம் இருப்பதும் இந்தியாவில்தான்! பி.ஜே.பி.யின் சிறந்த முதலமைச்சராகக் கூறப்படும் சாட்சாத் யோகி ஆதித்யநாத்தின் ஆட்சியில்தான், திரைப்படங்களில் காணும் காட்சிகளை மிஞ்சிடும் இந்தக் காட்சிகள் அரங்கேறியுள்ளன.

### காட்சி : 3

இந்தக் காட்சி அரங்கேறியதும் அதே 2023 ஆம் ஆண்டில்தான்! நடந்தது மே மாதம். நடந்த இடம் நீதிமன்றம்! சூர்ய பிரகாஷ் மற்றும் மிதிலேஷ் கிரி என்ற இரண்டு பேர் மீதான கொலைக் குற்றச்சாட்டு தொடர்பாக அவர்களை நீதிமன்றத்துக்கு போலீசார் அழைத்து வருகின்றனர். அப்போது "டுமீல்... டுமீல்..." என்று துப்பாக்கி வெடிக்கும் சத்தம் எழுகிறது! "அய்யோ... சுடுகிறார்கள்..." என்ற கூக்குரல், அந்த நீதிமன்றத்தில் எதிரொலிக்கிறது! சுட்டவர்களை அங்கிருந்த வழக்கறிஞர்கள் பிடித்து போலிசிடம் ஒப்படைக்கின்றனர். சூர்யபிரகாசும் - மிதிலேஷ் கிரியும் இரத்த வெள்ளத்தில் மிதக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நடந்தது - ஜான்பூர் நீதிமன்றத்தில்... இந்த நீதிமன்றம் இருக்குமிடம், நாம் மேலே குறிப்பிட்ட இரண்டு படுபயங்கரக் கொலைகள் நடத்தப்பட்ட அதே உத்தரப்பிரதேசத்தில்தான்! பா.ஜ.க.வின் யோகி ஆதித்யநாத் அதிகாரத்தில் அமர்ந்து அரசோச்சும் மாநிலத்தில்தான்!



**படிக்கப் படிக்க படபடப்பை உருவாக்கும் இதுபோன்ற படுபாதகச் செயல்களுக்கு உ.பி.யின் பா.ஜ.க. ஆட்சியில் பஞ்சமே இல்லை! ஏடுகளில் வரும் தொடர்கதைகள் போல இத்தகைய தொடர் படுகொலைகள் தொடர்ந்து நடந்தேறி வருகின்ற மாநிலம், பா.ஜ.க. ஆளும் உத்திரப்பிரதேசம்!**

இந்தக் கோரதாண்டவம் நடத்தி கைதானவர்கள் சிலர்மீது தொடரப்பட்ட வழக்குகளில் ஓராண்டாகியும் விசாரணை தொடங்காத நிலை உள்ளது!

இத்தனையையும் இப்போது நினைவூட்டுவது ஏன்? என்பதை படிப்பவர்கள் சிலர் உணர்ந்திருக்கலாம். இன்னும் சிலருக்குப் புரியாதிருக்கலாம்!

**நமது தமிழ்நாட்டில் இப்போது எதிர்க்கட்சிகள், ஆற்றின் வெள்ளத்தில் அடித்துச் செல்பவன், ஆற்றிலே மிதந்த ஒரு துரும்பைப் பிடித்து கரையேறத் துடிப்பதுபோல, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதுபோல ஒரு பிரம்மையை உருவாக்கிட முயற்சி செய்துவருகின்றனர்! தி.மு.கழகம் பெற்றிடும் தொடர் வெற்றிகளால் தங்களது கட்சிகளின் எதிர்காலம் இருண்டு விடுமோ என்ற அச்சத்தில் இப்போது, ஆற்றில் அடித்துச்செல்பவன் துரும்பைப் பிடித்தாவது கரை ஏறலாமா என்ற நப்பாசையில் ஈடுபடுவதைப் போல, தமிழ்நாட்டு அ.தி.மு.க., பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குரல் எழுப்புகின்றன!**



**சிலந்தி**

சமீபத்தில் நடந்த பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் கொலை, யாரும் எதிர்பாராத ஒரு நிகழ்வு! எல்லாத் தரப்பினரும் கட்சி வேறுபாடின்றி வருந்திய செயல்! உ.பி.யில் செல்வாக்குள்ள அந்தக் கட்சிக்கு தமிழ்நாட்டில் அத்தனை பெரிய தாக்கம் ஏதுமில்லை! திரு. ஆம்ஸ்ட்ராங் கொலையுண்ட பின்னர், அவர் தமிழ்நாடு பகுஜன் சமாஜ் கட்சிக்குத் தலைவராக இருந்தார் என்ற செய்தி ஏடுகளில் வந்தபின்தான் பலருக்கு அப்படி ஒரு கட்சி தமிழ்நாட்டில் இயங்குவது குறித்து தெரியவந்தது!

தேர்தல் காலங்களில் கூட்டணிப் பேச்சுவார்த்தைகளை தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் நடத்தும் போதும்கூட, அந்தக் கட்சியை யாரும் அழைத்ததாகத் தெரியவில்லை. அவர்கள் எங்கும் தனித்துப் போட்டியிட்டதாகவும் செய்திகள் இல்லை.

கொலையுண்ட ஆம்ஸ்ட்ராங் தனிப்பட்ட முறையில் அவர் இருந்த பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்தவர் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருந்ததில்லை! இப்போது அவர் கொலை தொடர்பான புலன் விசாரணையில் கைது செய்யப்பட்டும், போலீஸ் விசாரணையிலும் உள்ளவர்களில் பலரும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, ஒன்றியத்தை ஆளும் கட்சி என்று பல கட்சிகளையும் சார்ந்தவர்களாக உள்ளனர்! இந்தக் கொலை, பழிக்குப்பழி என்ற கோணத்தில் நடைபெற்றிருக்கலாம் என்று கருதும் நிலையும் உள்ளது! கொலை தொடர்பாக பலரும் உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**"உண்மைக் குற்றவாளிகள் யாரும் தப்பிக்க முடியாது, தப்பிக்க விடமாட்டோம்!" என்று முதலமைச்சர் கூறியுள்ளார். விசாரணை வளையம் விரிவுபடுத்தப் பட்டுள்ளது!**

**இப்படிப்பட்ட கொலைகள் அ.தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்து நடந்தபோது, எதிர்க்கட்சிகள் ஆட்சியாளரைக் குற்றம்சாட்டிய நேரத்தில், "வீட்டுக்கு வீடு போலீஸ் ஸ்டேஷனா வைக்க முடியும்? - திடீர் திடீரென பல்வேறு தனிப்பட்ட காரணங்களுக்காக இத்தகைய கொலைகள் நடந்து விடுகின்றன!" என்று அ.தி.மு.க.வின் முதலமைச்சர் கூறியது போல யாரும் இப்போது கூறவில்லை!**

தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டதாகக் கூச்சல் போட்டுக்கொண்டிருக்கும் பிரகஸ்பதிகள், உத்திரப்பிரதேசத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் இத்தகைய காட்சிகள் குறித்து என்ன கூறுவார்கள்? உ.பி.யில் அடுத்தடுத்து நடைபெற்ற இந்த துப்பாக்கிச் சூடுகளில் கொலைகாரர்கள் பயன்படுத்தியவை அத்தனையும் உயர்ரகத் துப்பாக்கிகள் என்று கூறப்படுகிறது. சாதாரணமானவர்களால் அந்தத் துப்பாக்கிகளை வாங்கவோ, பயன்படுத்தவோ முடியாது என்றும் கூறுகிறார்கள். இந்த எல்லா கொலைகளின் பின்னணியிலும் ஒரு மாபெரும் சக்தி இருப்பதாகவும் கருதப்படுகிறது!



Gangster-politician Mukhtar Ansari's alleged aide Sanjeev Maheshwari Jeeva was shot dead on Lucknow court premises on Wednesday, police said.

எல்லாச் சம்பவங்களிலும் அப்பாவிகள் சிலர் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது! சட்டம் ஒழுங்கைக் காத்திட வேண்டியவர்களே பின்னின்று இயக்கியதால்தான் சில வழக்குகள் ஓராண்டு காலமாக கிடப்பிலே கிடப்பதாகவும் கூறப்படுகிறது!

**தமிழ்நாட்டில் நின்றுகொண்டு, இல்லாத ஊருக்கு போகாத வழியைக் காட்டிக் கொண்டிருக்கும் அரசியல் மூடர்கள், இனியாவது அரங்கேற இயலாத தங்கள் அரசியல் நாடகங்களை மூட்டை கட்டுவார்கள் என நம்புவோமாக!**